திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி, மண்டலம் 4 மற்றும் 2 க்கு உட்பட்ட வார்டுகளில் ரூபாய் 6.19 கோடி செலவில் பல்வேறு சாலை பணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர். உடன் மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா , மாநகரப் பொறுப்பாளர் சண் பிரகாஷ், மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர்,என்.ஜோதிலட்சுமி, பகுதி கழக செயலாளர்கள் வி .பேபி சேகர், ஜி.நாராயண பிரசாத், மாவட்ட பொருளாளர் பா நரேஷ்குமார், வழக்கறிஞர் வினோத், , மதிசெல்வம், வட்ட செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் , ஆனந்த் , ஆ.சசிகலா, சரளா செந்தில், சு.பன்னீர் செல்வம் , ராஜேஷ்குமார், டி.மதிசெல்வம், சக்திவேலன் துளசிங்கம் சக்திவேலன், பி.ஜி.பாண்டியன் , விமல், மற்றும் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உள்ளனர்



திருவள்ளூர் மாவட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான இலவச வீட்டு மனை பட்டா 541 பயனாளிகளுக்கு திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் இலவச வீட்டு மனை பட்டா வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் திருவள்ளூர் வாட்டசியர் பாலாஜி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன்,பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, ஒன்றிய செயலாளர்கள் பிரகாஷ் ஞான ஒளி, கே.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ்,கூளூர் எம்.ராஜேந்திரன், டி.மோதிலால், மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உள்ளனர்

திரு.வி.க.நகரில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட மருத்துவ முகாம்!

57 பயனாளிகளுக்கு ரூ.48.72 இலட்சத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்கினார்!

சென்னை.பிப்.15-

முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர் எவர்வின் வித்யாஷ்ரம் சீனியர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று (14.02.2026) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 14 மண்டலங்களில் நடத்தப்பட்டது. இதன் மூலமாக 34,621 மருத்துவப் பயனாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக, இன்று 15வது கட்டமாக திரு.வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் சேவைகள் மற்றும் கை மற்றும் கால் இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கை, கால் உள்ளிட்ட அவயங்கள் வழங்கிட ஏதுவாக கை, கால் அளவீடுகள் எடுக்கப்படுவதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 8 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரியால் இயங்கும் மடக்கு சக்கர நாற்காலிகள் ரூ.8.40 இலட்சம் மதிப்பீட்டிலும், 30 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1.08 இலட்சம் மதிப்பிட்டில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் ரூ.30.54 இலட்சம் மதிப்பீட்டிலும், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5.58 இலட்சம் மதிப்பீட்டில் நவீன செயற்கை அவயங்கள் என மொத்தம் 43 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.44.53 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவி உபகரணங்களை வழங்கினார். மேலும், முகாமில் கலந்து கொண்ட 2 மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டையினை வழங்கினார்.

தொடர்ந்து, தொழிலாளர் நலத் துறையின் சார்பில் மானியத்தில் ஒரு பெண் பயனாளிக்கு ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆட்டோவும், ரூ.20,000 மதிப்பீட்டில் ஒரு பயனாளிக்கு

இஸ்கூட்டரையும் வழங்கினார். கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் உறுப்பினர் இயற்கை மரணத்திற்கு ரூ.55 ஆயிரமும், சாலை விபத்து மரணத்திற்கு ரூ.2.05 இலட்சத்திற்கான உதவித் தொகைக்கான ஆணையும், உயர் கல்வி பயிலும் உறுப்பினர் மகனுக்கு ரூ.5 ஆயிரம் உதவித்தொகை, 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற உறுப்பினர் மகனுக்கு 2 நபருக்கு தலா ரூ.3 ஆயிரம் உதவித்தொகை, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற உறுப்பினர் மகனுக்கு ரூ.2,400 உதவித்தொகை, உறுப்பினர் மகளின் திருமணத்திற்கு ரூ.20 ஆயிரம் உதவித்தொகை, கட்டுமான மற்றும் அமைப்புசாரா ஆட்டோ ஓட்டுனர் 5 நபர்களுக்கு தலா ரூ.1200 மதிப்பீட்டில் முதியோர் ஓய்வூதியத் தொகைக்கான ஆணைகள் என 14 பயனாளிகளுக்கு ரூ.4.19 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் அமைச்சர் அவர்கள் முகாமிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும், சிறந்த மருத்துவ சேவைகளையும் வழங்கிட மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்ட மன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு) திருமதி சு.ப.சாந்தி, வடசென்னை மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் சரவணகுமார் மற்றும் அலுவலர்கள் மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தரமணி 5சி பேருந்து நிறுத்தம் அருகில் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில்

புதிய பல்நோக்கு மையக் கட்டடத்திற்கான பணி!

மேயர் திருமதி ஆர்.பிரியா அடிக்கல் நாட்டினார்!

சென்னை.பிப்.15-

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-178க்குட்பட்ட தரமணி 5சி பேருந்து நிறுத்தம் அருகில் மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக பல்நோக்கு மையம் கட்டடம் கட்டுவதற்கு மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (14.02.2026) அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளும், பொது சுகாதாரப் பணிகளும், சேவைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் பொதுமக்கள் மிகவும் பயன்பெறும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து பணி தேர்வு செய்யப்படுகிறது. அவ்வாறாக இன்று மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் தரைத்தளத்தில் 82.20 ச.மீ. பரப்பளவில் தமிழ்நாடு நுகர்பொயருள் வாணிபக் கழகம் மற்றும் கால்நடை மருத்துவ மையமும், முதல் தளத்தில் 82.20 ச.மீ. பரப்பளவில் உடற்பயிற்சிக் கூடமும் அமைக்கப்படுவதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மிகவும் பயன் பெற உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், மண்டலக்குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! நந்தனம் கி.மதி – எஸ்.முரளி – கே.ஏழுமலை முன்னிலை!

123 அ வட்ட துணை செயலாளர் பா.தினேஷ் இல்ல மணவிழா வரவேற்பு!

ஆ.இராசா எம்.பி. – அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் –பி.கே.சேகர்பாபு வாழ்த்துரை!

சென்னை, பிப். 15-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123வது அ வட்டதுணை செயலாளர் பா. தினேஷ், தி.கௌரி ஆகியோரின் மகன் தி.நித்திஷ்குமார் - க்கும் க.ராஜ்குமார். ரா.வெண்ணிலா ஆகியோரின் மகள் ரா.சுவிதா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி இன்று 15.02.2026 ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு மேல் சென்னை18, தேனாம்பேட்டை, கே.பி.தாசன் சாலையில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

விழாவிற்கு மாவட்டச்செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

நந்தனம் கி.மதி - எஸ். முரளி - கே.ஏழுமலை முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழச்சியில் கழகதுணைபொதுச்செயலாளர் ஆ.ராசா, அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினார் தமிழச்சிதங்கபாண்டியன், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., டாக்டர்.ந.எழிலன் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., மு.மகேஷ்குமார், (சென்னை மாநகர துணை மேயர்) கோ.வி.லெனின், (கழக த.தொழில்நுட்ப அணி ஆலோசகர்), ராஜா அன்பழகன் எம்.சி. (மாவட்ட அமைப்பாளர் இளைஞர் அணி) பங்கேற்கின்றனர்.

வரவேற்புரை: மூ.இராஜேந்திரன் (123அ வட்ட செயலாளர்) மு.இ.ஏழுமலை (123வது வட்ட செயலாளர்) S.R.ராஜா சுரேஷ்குமார் (122 வட்டசெயலாளர்) அகல்யா விஸ்வநாதன் (மயிலை.மேற்கு பகுதி து.செயலாளர்) சீ.வி. திவான்குமார்(மயிலை.மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்)

123 வது அ வட்டம் நிர்வாகிகள் ஜி.முருகன், என்.குமார், ஜ.ஆர்த்திமுத்து, ஆர்.அன்பு, வி.வெங்கடேசன், வி.விநாயகம், எம்.செல்வம், ஆர்.ஸ்சிமேரி பி.மணிகண்டன், டி.எபினேசர், ஆர்.மாதவன், டி.சுசிந்தரி, ஆர்.ராஜேஷ், எஸ். சசி,பதம்சந்த் (எ)வினோத், மாஸ் எழில், என். கிருஷ்ணகுமார்

நன்றிவுரை: C.விஸ்வநாதன், MP.மருதமுத்து, E.மாரி, பா.அமரேசன், சீ.வி.மணிகண்டன், D.வீரராகவன்

திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மயிலாப்பூர் மேற்கு பகுதி 123அ வட்ட துணை செயலாளர் பா. தினேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மகளிர் உரிமைத் தொகை ரூ.5 ஆயிரம்: தி.மு.க.வு.க்கு வாக்களித்து மீண்டும்

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினை வெற்றி பெறச் செய்வோம்!

திருவள்ளூர் மாவட்ட பெண்கள் உறுதி!

திருவள்ளூர். பிப்.15:-

2021 தேர்தல் அறிக்கையில் மகளிர்க்கு ஆயிரம் உதவித் தொகை வழங்கப்படும் என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். அதன்படி 1 கோடியே 31 லட்சம் பேருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பிரதி மாதம் 15-ஆம் தேதி வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பிப்ரவரி மாதம் 13-ஆம் தேதி கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறும் 1கோடியே 31 லட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டது. இதனால் பெண்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.

தமிழ்நாட்டு மகளிருக்கு இந்த அரசு தந்த உறுதிமொழிதான் உரிமைத்தொகை. யார் தடை ஏற்படுத்தினாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டேன். தேர்தலைக் காரணம் காட்டி, மூன்று மாதங்களுக்கு உரிமைத்தொகையை முடக்கப் பார்க்கிறார்கள். முந்திக்கொண்டது நமது திராவிட மாடல் அரசு. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான முன்பணமாக ரூ.3 ஆயிரமும் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக ரூ.2 ஆயிரத்தை 1.31 கோடி கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கும் 5 ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டிருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். மேலும் தமிழ்ப் பெண்கள் ஆதரவோடு அடுத்தும் நாங்கள்தான் வெல்வோம். திராவிட மாடல் 2.0-இல் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகையை 2 ஆயிரமாக உயர்த்தி வழங்குவோம். இது, என் சகோதரிகளுக்கு இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுக்கும் வாக்குறுதி என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பெண்கள் அரசுக்கும், முதல்வருக்கும் தங்களது கோடானு கோடி நன்றியினை தெரிவித்துள்ளனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரியில் எண்.17 ஜீவா தெருவில் வசித்து வருபவர் தீ.பொன்மொழி ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வைத்தது குறித்து கூறும் போது, தனது கணவர் கூலித் தொழிலாளியாக இருப்பதால் அன்றாட செலவுக்கே பணம் இல்லாமல் குடும்பத்தை நடத்த முடியாமல் சிரமப்பட்டு வந்தேன். தற்போது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலம் பிரதி மாதம் ஆயிரம் ரூபாய் வங்கி கணக்கில் அனுப்பி வைத்ததால் மகிழ்ச்சி அடைந்தோம். இதனால் அன்றாட செலவுகளையும் சமாளித்து வந்தோம். திமுக அரசு தமிழக மக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அளித்து வரும் நிலையில். பேருந்தில் இலவச பயணம் திட்டம் மூலம் பெண்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். இந்நிலையில் தற்போது தேர்தல் நெருங்கிவிட்டதால் 3 மாதத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படமாட்டாது என பேசிக் கொண்டனர். இதனால் செய்வதறியாது தவித்து வந்த நிலையில் நேற்று 13-ஆம் தேதி காலை ரூ. 5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வந்ததைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். சொன்னதை செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து தெரிவித்த நிலையில் தற்போது. யாரும் எதிர்பார்க்காத வகையில் ரூ. 5 ஆயிரத்தை வழங்கிய முதல்வருக்கு கோடானு கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். நடைபெற உள்ள 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று ரூ. 2ஆயிரம் வழங்குவதாகவும் அறிவித்திருப்பதால் பெண்களாகிய நாங்கள் திமுக அரசுக்கு வாக்களிப்போம் என்றும், குடும்ப உறுப்பினர்களையும் திமுகவுக்கு வாக்களிக்க செய்து திமுகவை மீண்டும் வெற்றி பெற செய்வோம் எனவும் தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டி தொகுதி பெரியப்பளையம்யைச் சேர்ந்த கயல்விழி என்பவர் ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வைத்தது குறித்து கூறும் போது. 2021-தேர்தலில் திமுக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. அப்போது தேர்தல் வாக்குறுதியாக அளித்த அனைத்தையும் ஒவ்வொன்றாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். பள்ளி மாணவர்கள், பெண்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைத்து தரப்பினருக்கும் பல்வேறு வகையான நலத்திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். இதனால் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த முதல்வர், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மூலம் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள பெண்களும் அரசின் நலத்திட்டங்களை பெறும் வகையில் வழங்கி வருகிறார். இதனால் குடும்ப செலவுகளுக்கு பிறரை எதிர்பார்த்து வாழாமல் இருக்கும் பணத்தை வைத்து குடும்பத்தை நடத்தி வருகிறோம். ஆனால் நேற்று தனது வங்கி கணக்கில் ரூ.5 ஆயிரம் உரிமைத் தொகை வரவானதால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். தேர்தல் காரணமாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை நிறுத்தப்படும் என்று பொதுமக்கள் மத்தியில் பேசிக் கொண்டதால் என்ன செய்வதென்று புரியாமல் தவித்த நிலையில் ரூ. 5 ஆயிரம் வரவு வைத்து பெண்கள் மத்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நீங்கா இடம் பிடித்து விட்டார். எனவே தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்து வருவதால் வரும் 2026 தேர்தலில் திமுகவுக்கு வாக்களித்து மீண்டும் வெற்றி பெறச் செய்வோம் என உறிதியளித்தார்.

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி திருவள்ளூர் சேர்ந்த ராஜேஸ்வரி என்பவர் ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வைத்தது குறித்து கூறும் போது, கலைஞர் ஆட்சி செய்த போது தமிழக மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார். அதே போல் தற்போது, 2021 சட்டமன்றத் தேர்தலின் போது அறிவித்த வாக்குறுதிகளை முனைப்போடு செயல்பட்டு ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார். பெண்களுக்கு பேருந்தில் இலவச பயணம் திட்டம் மூலம் ஏழை எளிய மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த தமிழக முதல்வர், அடுத்தடுத்து பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாயை வழங்குவதாக அறிவித்தது போல் உடனடியாக வழங்கினார். இது எங்களைப் போன்ற பெண்களுக்கு பேருதவியாக உள்ளது. திட்டங்கள் ஏட்டளவில் இல்லாமல் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு நேரடியாக சென்று சேரும் வகையில் அதனை வடிவமைத்து செயல்படுத்தி வருவதால் அனைத்து தரப்பு மக்களும் இந்த ஆட்சி மீது அதிக நம்பிக்கையுடன் உள்ளனர். இந்நிலையில் நேற்று கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வந்ததைக் கண்டு அதிர்ச்சி கலந்து மகிழ்ச்சியில் உறைந்து போனோம். சொன்னதை மட்டுமல்லாது சொல்லாததையும் செய்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கடி சொல்லி வருவதை நிரூபிப்பது போல். ரூ. 5 ஆயிரத்தை 1 கோடியே 31 லட்சம் பேருக்கு வழங்கி நிரூபித்திருப்பதோடு. வரும் தேர்தலுக்கு பிறகு நடைபெறும் ஆட்சியில் பிரதி மாதம் ரூ. 2 ஆயிரம் வழங்குவோம் என்றும் தற்போது அறிவித்திருப்பதால் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மீண்டும் தமிழக முதல்வராக்க நாங்கள் திமுகவுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்வோம் என உறுதியளித்தார்.

ஆவடி சட்டமன்ற தொகுதி நடுகுத்தகை யைச் சேர்ந்த கற்பகம் செல்வி என்பவர் ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வைத்தது குறித்து கூறும் போது, தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏழை எளிய மக்களின் மனதில் சிம்ம சொப்பனமாக நீங்கா இடம் பிடித்துள்ளார். ஆட்சிக்கு வந்தால் எதையெல்லாம் செய்வோம் என்று சொன்னாரோ. அதை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் பிளஸ் 2 மாணவர்களுக்கு லேப் டாப், கல்லூரி மாணவர்களுக்கு லேப் டாப், உயர் கல்வி பயில கல்வி உதவித் தொகை வழங்கி மாணவர்கள் மனதிலும், பேருந்தில் இலவச பயணம் திட்டம் மூலம் பெண்கள் மனதிலும் இடம் பிடித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கியதால் பெண்கள் மத்தியில் மீண்டும் இடத்தை பிடித்துள்ளார். இந்நிலையில் நேற்று யாருமே எதிர்பார்க்காத வகையில், ரூ. 5 ஆயிரத்தை பெண்கள் வங்கி கணக்கில் செலுத்தி ஏழை எளிய மக்களின் மனதில் சிம்மசொப்பனமாக நீங்கா இடம் பிடித்துள்ளார். இதனால் தமிழகத்தில் உள்ள பெண்களாகிய நாங்கள் மிகுந்த மன நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் உள்ளோம். ஒரு முதல்வராக பொது மக்களின் கோரிக்கை என்ன வென்று கேட்டறிந்து அதை நிறைவேற்றவும், அனைத்து மக்களிடமும் அந்ததிட்டம் சென்று சேர என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதை எடுத்து சிறப்பாக செயல்படுத்தி வருவதால் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் புதிது புதிதாக எத்தனை கட்சிகள் முளைத்தாலும், திமுகவுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்வோம் என நாங்கள் சபதம் எடுப்பதாக தெரிவித்தார்.

பூந்தமல்லி சட்டமன்ற தொகுதி புலியுரைச் சேர்ந்த சங்கீதா ராஜ் என்பவர் ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வைத்தது குறித்து கூறும் போது, கணவர் கூலி வேலை செய்து, அதில் வரும் வருமானத்தில் குடும்பத்தை நடத்துவது சிரமமாக இருந்த நிலையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மூலம் வங்கி கணக்கில் ஆயிரம் ரூபாயை வழங்கினார் முதல்வர் மு.க.ஸ்டாலின். அதனால் சிரமம் குறைந்தது. மகிழ்ச்சி அடைந்தோம். அதே போல் பொது மக்களின் கோரிகைகளை நிறைவேற்றுவதற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி முகாம்கள் நடத்தி தேவைகளை பூர்த்தி செய்து வந்தார். முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், 3 சக்கர மோட்டார் சைக்கிள் வழங்குவது என அனைத்து தரப்பு மக்களும் பயன்பெற வேண்டும் என்பதை குறிக்கோளாக கொண்டு அதனை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். பெண்களுக்கு இலவச பேருந்து திட்டம் மூலம் ஏழை. எளிய. கூலித் தொழிலாளி பெண்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். தொடர்ந்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மூலம் ஆயிரம் ரூபாயை வழங்கி பெண்கள் மனதில் சிம்மாசனம் போட்டு அமர்ந்தார். இந்நிலையில் நேற்று 13-ஆம் தேதி 1 கோடியே 31 லட்சம் பெண்களுக்கும் ரூ. 5 ஆயிரத்தை கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கியதன் மூலம் பெண்கள் மட்டுமல்லாது குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் மனதிலும் இடம் பிடித்துள்ளார். இதனால் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவுக்கு வாக்களித்து மீண்டும் திமுகவை ஆட்சியில் அமர வைக்க பாடுபடுவோம் என உறுதியளித்தார்.

திருத்தணி சட்டமன்ற தொகுதி விடியங்காடு கிராமத்தைச் சேர்ந்த குமுதா என்பவர் ரூ.5 ஆயிரம் வங்கி கணக்கில் வரவு வைத்தது குறித்து கூறும் போது, தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்து விட்டு, அடுத்த தேர்தல் வரும் வரை எட்டிக்கூட பார்க்காமல் இருந்ததை மாற்றி அமைத்தவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின். மக்களின் குறைகளை கேட்டறிந்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என சட்டமன்ற உறுப்பினர்களை கிராமம் கிராமமாக அனுப்பி ஆய்வு செய்து அதனை தீர்க்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் திமுக மக்கள் மனதில் இடம் பிடித்தது. திட்டத்தை அறிவித்துவிட்டு, அதனை செயல்படுத்தாமல் அலட்சியமாக இல்லாமல் அதனை எப்படி நிறைவேற்றுவது. அனைத்து மக்களும் அந்த திட்டத்தின் பயன்களை எப்படி அடைவது என்பது வரை ஆராய்ந்து அதனை செயல்படுத்தி வருவதன் மூலம் அனைத்து தரப்பு மக்களிடமும் திமுக அரசு நீங்கா இடம் பிடித்துள்ளது. கோரிகைகளை மட்டுமல்லாது.திட்டங்களையும் செயல்படுத்தி வருவதோடு, ரூ. 5 ஆயிரம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை சஸ்பென்சாக வழங்கி அனைத்து மக்களையும் மகிழ்ச்சியில் மூழ்க செய்த முதல்வருக்கு கோடானு கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த நன்றிக் கடனை வரும் 2026 சட்டமன்றத்தேர்தலின் போது வாக்குகளாக செலுத்து நாங்கள் அதனை நிவர்த்தி செய்வோம் என்றும் உறுதியளித்தார்.

தொகுப்பு

இரா.அண்ணாதுரை

திருவள்ளூர் மாவட்டம் முரசொலி நிருபர்

மதுரவாயலில் – உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ்

ரூ.32.57 இலட்சத்தில் சிறுவர் பூங்கா - விளையாட்டுத் திடல்!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.15-

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-150, காரம்பாக்கம், ராஜேஸ்வரி நகர் 2வது தெருவில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் ரூ.32.57 இலட்சம் மதிப்பீட்டில் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் திறப்பு நிகழ்ச்சி நேற்று (13.02.2026) 150வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஹேம